**மாவட்ட உரிமையியல் மற்றும் குற்றவியல் நீதித்துறை நடுவர் நீதிமன்றம், ஆத்தூர்.**
**முன்னிலை :– திரு.S.அன்புதாசன், பி,காம்., பி.எல்.,**

**மாவட்ட உரிமையியல் மற்றும் குற்றவியல் நீதித்துறை நடுவர், ஆத்தூர்.**

**2025 ம் ஆண்டு நவம்பர் திங்கள் 18 ஆம் நாள் செவ்வாய்கிழமை**

**I.A. No. 03/2025 in O.S. No.174/2019**

திருமதி. ராமாயி அம்மாள் வகையறா
...... மனுதாரர்கள்/வாதிகள்

/ எதிர்/

பால்ராஜ் வகையறா
..... எதிர்மனுதாரர்கள்/ பிரதிவாதிகள்

இம்மனுவானது இந்நீதிமன்றத்தில் இறுதியாக இன்று(18.11.2025) இந்நீதிமன்ற விசாரணைக்கு வந்தபோது மனுதாரர்கள்/வாதிகள் தரப்பில் கற்றறிந்த வழக்கறிஞர் திரு.M.ரவிச்சந்திரன் அவர்கள் முன்னிலையாகியும், எதிர்மனுதாரர்கள் தரப்பில் எதிமனுரை இல்லை என மேற்குறிப்பு செய்யப்பட்டும், மனு மற்றும் வழக்கு ஆவணங்களைப் பரிசீலித்தும் இந்நீதிமன்றம் வழங்கும்.

**உத்தரவு**

மனுதாரர் தாக்கல் செய்துள்ள மனுவில் 7ம் மனுதாரர்/7ம் வாதியை கார்டியன் ஸ்தானத்திலிருந்து விலக்க கேட்டு கட்டளை 32 விதி 11 பிரிவு 151–ன்படி மனு தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

**2) மனுவுரை சுருக்கம்**

1. அசல்வழக்கில் இம்மனுதாரர் 1ம் வாதி, எதிர்மனுதாரர்கள் மீது நிரந்தரஉறுத்துக்கட்டளை பரிகாரம் கோரி தாக்கல் செய்து நிலுவையில் இருந்து வருகிறது. மேற்படி வழக்கு தாக்கல் செய்யும்பொழுது 8ம் மனுதாரர்/8ம் வாதி மைனராக இருந்துள்ளார். தற்போது இம்மனுதாரர் மேஜராகிவிட்டார். தற்போது இம்மனுதாரருக்கு வயது 26 ஆகிறது. எனவே, 8ம் மனுதாரர்/8ம் வாதியை மேஜராக விளம்புகை செய்ய உத்தரவு வேண்டி தனியாக மனுத் தாக்கல் செய்துள்ளார். எனவே, கார்டியனாக இருந்த 7ம் மனுதார்/7ம் வாதியை கார்டியன் ஸ்தானத்திலிருந்து விலக்கி உத்தரவு பிறப்புவிக்க வேண்டி இம்மனு தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

2) எதிர்மனுதாரர்கள் தரப்பில் எதிமனு உரை இல்லை என மேற்குறிப்பு செய்யப்பட்டுள்ளது.

3) இனி தீர்மானிக்க வேண்டியது யாதெனில், இம்மனு அனுமதிக்கத்தக்கதா? இல்லையா? என்பதேயாகும்.

**தீர்வு**

மனுதாரரின் மனு மற்றும் வழக்குக் கோப்பினைப் பரிசீலனை செய்ததில், இந்த வாரிசு மனு தாக்கல் செய்த சமயத்தில் 8ம் மனுதார்/8ம் வாதி மைனராக

இருந்து வந்ததாகவும், தற்சமயம் 8ம் மனுதார்/8ம் வாதி மேஜராகிவிட்டார் எனவும், 8ம் மனுதார்/8ம் வாதியை மேஜர் ஆக விளம்புகை செய்ய உத்தரவு வேண்டி தனியாக மனுத் தாக்கல் செய்துள்ளதாகவும், எனவே கார்டியனாக இருந்த 7ம் மனுதார்/7ம் வாதியை கார்டியன் ஸ்தானத்திலிருந்து விலக்கி இம்மனுவை அனுமதிப்பதுதான் நீதியின் பால் உகந்தது என்று இந்நீதிமன்றம் தீர்வு காண்கிறது.

**முடிவில்**, இம்மனுவை அனுமதித்து உத்தரவிடப்படுகிறது. செலவுத்தொகை இல்லை.

இந்த உத்தரவு என்னால் சுருக்கெழுத்து தட்டச்சருக்கு சொல்லப்பட்டு, அவரால் நேரடியா கணிணி மூலம் தட்டச்சு செய்யப்பட்டு, என்னால் பிழைத் திருத்தம் செய்யப்பட்ட பின்னர் 2025ம் ஆண்டு நவம்பர் மாதம் 18 ஆம் நாள் என்னால் திறந்த நீதிமன்றத்தில் அவையறிய பகரப்பட்டது.

SUBRAMANIYAN ANBUTHASAN
Digitally signed by SUBRAMANIYAN ANBUTHASAN
Date: 2025.11.30 11:52:28 +0530

மாவட்ட உரிமையியல் மற்றும் குற்றவியல்
நடுவர் ஆத்தூர்.